INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**பத்திரிகை அறிக்கை: சித்திரவதை மீதான ஐ நா ஆணைக்குழுவிற்கு சிஜடி மற்றும் ரிஜடி ஆகிய சித்திரவதை பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரியை இலங்கை அனுப்புகிறது.**

15 நவம்பர் 2016

ஜெகானாஸ்பேர்க்: இன்று சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் இலங்கையின் நடவடிக்கைகளை தற்காத்துக் கொள்வதற்காக இலங்கை அரசின் தூதுக்குழுவில் சிவில் யுத்தம் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் மோசமான சித்திரவதைகளுக்கு பெயர்போன இடத்திற்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரி இடம்பெறுகிறார் என்று எதிர்பார்க்கப்படுகிறுது.

திரு.சிசிற மென்டிஸ் இலங்கையில் போர் தீவிரம் பெற்ற மார்ச் 2008 தொடக்கம் யூன் 2009 வரையான காலப் பகுதியில் காவல்துறையின் குற்ற விசாரணைத் திணைக்களத்தின் (சிஜடி) பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றினார், இந்தக் காலப் பகுதியில் அவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கும் (ரிஜடி) பொறுப்பாக இருந்தார். 'நான்காம் மாடி' எனப் பரவலாக குறிப்பிடப்படும் இடத்தையும் இவர் நடத்தி வந்தார் - நான்காம்மாடி என்பது சித்திரவதையை விபரிப்பதற்காக இலங்கையர்கள் பயன்படுத்தும் சுருக்கமான சொல் ஆகும். கடந்த வருட ஐநா அறிக்கையில் திரு மென்டிசின் பெயர் குறிப்பிட்டுள்ளதுடன் சிஜடியின் தலைமையகத்திலுள்ள விசாரணையறைகள் சித்திரவதைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் அவை அடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இரும்புக் கம்பிகள், கொட்டன்கள் மற்றும் நீரில் மூழ்கடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட தண்ணீர் நிரப்பிய பரல்கள், கப்பிகள் மற்றும் உபகரணங்கள் என அனைத்துமே சித்திரவதைகளுக்குரிய உபகரணங்களைக் கொண்டிருந்தன.

*'இலங்கை அரசானது சித்திரவதை பற்றிய ஐ.நாவின் கூட்டத்திற்கு சித்திரவதைகளை மேற்கொண்ட பிரிவுகளுக்குப் பொறுப்பாக இருந்த ஒருவரை தனது பிரதிநிதியாக அனுப்புவது பாதிக்கப்பட்டவட்டர்களையும் மற்றும் சர்வதேச சமூகத்தையும் முற்றிலும் இழிவுபடுத்தும் ஒரு செயலாகும்'* என ITJP யின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஐ நா அறிக்கையானது போர் முடிவுக்குவந்த காலப் பகுதியில் அரசாங்கப் படைகளால் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் பரவலாகவும் ஒரு திட்டமிடப்பட்ட முறையிலும் மேற்கொள்ளப்பட்டதாக முடிவு செய்துள்ளதுடன் அவை போர்குற்றங்கள் மற்றும்/அல்லது மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என நம்புவதற்கு தேவையான நியாயமான அடிப்படைகளையும் அந்த அறிக்கை கண்டுபிடித்துள்ளது. போர் உச்சக்கட்டத்தை அடைந்த காலப் பகுதியில் இரண்டு பொலிஸ் பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரி என்ற வகையில் தன்னுடைய அதிகாரிகள் பரவலாக சித்திரவதையை மேற்கொண்டு வந்தனர் என்பது திரு மென்டிசுக்கு தெரிந்திருக்க வேண்டும் - பல சந்தர்ப்பங்களில் உண்மையில் அவர் இருந்த

பொலிஸ் தலைமையக கட்டடத்திலே அவை நடைபெற்றிருக்கின்றன அத்துடன் இன்னும் இவர் இவற்றைத் தடுப்பதற்கோ அல்லது விசாரிப்தற்கோ அல்லது பொறுப்பானவர்களைத் தண்டிப்பதற்கோ எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளத் தவறிவிட்டார்.

*''திரு மெண்டிஸ் சுவிட்சர்லாந்தில் ஐ நா கூட்டத்தில் அதுவும் சித்திரவதை பற்றிய கூட்டத்திற்கு தன்னுடைய முகத்தைக் காட்டுவதற்கு துணிந்ததற்கு அவர் இதில் பங்கு பற்றும் போது அவருக்கு எதிராக எந்தச் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படதவாறு அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையே காரணமாகும்''* என சூக்கா தெரிவித்தார்.

கடந்த 17 மாதங்களாக திரு மெண்டிஸ் இலங்கைப் பாதுகாப்பமைச்சின் தேசிய புலனாய்வு மையத்தின் பணிப்பாளராக இருந்துள்ளார். இந்தப் பதவியின் கீழ் கடந்த காலத்தில் இடம்பெற்ற சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை தொடர்பில் அணுகி தீர்வு காண்பதற்கு அல்லது தொடரும் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறையை நிறுத்துவதற்கு அவர் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டதற்கான அறிகுறிகளும் இல்லை. ITJP ஆனது சிறிசேன அரசாங்கத்தின் கீழ் பொலிஸ், இராணுவம் மற்றும் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் 36 கடத்தல் மற்றும் சித்திரவதைச் சம்பவங்களை ஆவணப்படுத்தியிருக்கிறது. புதிய அரசாங்கத்தின் கீழ் பாதுகாப்பு படைகளால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் தொடர்பான 628 முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணையகமும் தெரிவித்துள்ளது.

மேலதிக தகவல்களுக்கு திரு மெண்டிஸ் பற்றிய ITJP யின் அறிக்கையைப் பார்க்கவும்.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT